தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-10-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## உடல் நலம் காக்க கை கழுவுதல் அவசியம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப் பணித் திட்டம் சார்பில் 15 அக்டோபர் 2014 அன்று உலக கை கழுவுதல் தினம் அனுசரிக்கப்பட்டது. கை கழுவுதல் தினம் அனுசரிக்கப்பட்டது. கை கழுவுதல் என்பது பல நோய்களிலிருந்து காக்கும் தடுப்பு மருந்தாகப் பயன்படுகிறது. உலக அளவில் கை கழுவுதலுக்கான பொது மற்றும் தனியார் பங்களிப்பு இயக்கம் மனிதக் கழிவுகள் தான் நோய் கிருமிகளின் இருப்பிடமாக உள்ளது என்று கூறுகிறது. இதனால் வயிற்றுப் போக்கு, காலரா, டைபாய்டு மற்றும் ஜீரண உறுப்பு மற்றும் மூச்சுக் குழாய் மற்றும் உறுப்புகளின் நோய்களுக்கு காரணமாக உள்ளது. ஒரு கிராம் மனிதக் கழிவில் 10 மில்லியன் வைரஸ் மற்றும் ஒரு மில்லியின் பாக்டீரியாக்கள் உள்ளன. ஒரு நாடு முன்னேற்றமடைய கல்வி, சுகாதாரம், உடல்நலம், நிரந்தர வருமானம், வேளாண்மை ஆகியவை தூண்களாக உள்ளன. தமிழகத்திலும் சுகாதாரத்தில் முன்னேற்றம் அடைந்தால் மனிதவள வளர்ச்சிக் குறியீடு நல்ல முன்னேற்றம் அடையும். வேளாண்மையில் தொழில் செய்யும் பணியாளர்கள் மண் மற்றும் ஆய்வுக் கூடத்திலும் இரசாயனங்கள், பூச்சிக் கொல்லிகள் ஆகியவை உபயோகப் படுத்துவதால் நுண்ணுயிர்களுடன் தொடர்பு ஏற்படுகிறது. இதனால் அவர்கள் கையுறை அணிந்து வேலை செய்ய வேண்டும். சாப்பிடும் முன் நன்றாகக் கை கழுவ வேண்டும் என்னும் அவசியத்தை உணர்த்துவதற்காக ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. 25 தொழிலாளர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி ஏற்பாட்டை நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர் மு.ரா. லதா செய்தார். திட்ட ஒருங்கினைப்பாளர் முனைவர் க. குமுதா ஆய்வு மற்றும் வயல் வெளியில் வேலை முடிந்தபின் கை கழுவுதல் மற்றும் காலைக் கடன்கள் முடிந்த பின் கை கழுவுதல், சுத்தமாக இருத்தலின் அவசியம் ஆகியவற்றை எடுத்துரைத்தார். இதனால் பணியாளர்கள் மட்டுமின்றி அவர்களுடைய பருவமடைந்த பெண் குழந்தைகள், பெயரக் குழந்தைகள் ஆகியோர்க்கும் அவர்கள் மூலம் வலியுறுத்த முடியும்.

மக்கள் தொடர்பு அலுவலர்